# ஹஸ்ரத் உம்மே சுலைம்

(ரலியல்லாஹு அன்ஹா)

அமத்துல் ஹஃபீஸ் ஆபிதா



# ஹஸ்ரத்
# உம்மே சுலைம்

ரலியல்லாஹு அன்ஹா

அமத்துல் ஹஃபீஸ் ஆபிதா

**வெளியிடுவோர்**

லஜ்னா இமாயில்லாஹ்

தூத்துக்குடி

**Tamil Translation of the Book**

**Hazrat Umme Sulaim[ra]**

ஹஸ்ரத் உம்மே சுலைம்[ரலி]

Author : Amathul Hafeez Aabida

Translator : R. Amathul Qadheer

First Edition : 2021

Copies : 1000

Publisher : Lajna Imaillah
Tuticorin-Tamil Nadu

Printed at : Shanthi Screens
Tirunelveli-627001
Tamil Nadu

National Toll free No: 1800-103-2131

Tamil Toll free No: 1800-425-40000

# பொருளடக்கம்


1. இஸ்லாத்தை தழுவுதலும் திருமணமும்........................................ 1
2. குழந்தைகள்.................................................................... 3
3. ஹஸ்ரத் தூய நபி[ஸல்] அவர்களது துஆக்களின் மீது கொண்ட நம்பிக்கை........................................................ 4
4. அனஸ் (ரலி) அவர்களை அர்ப்பணித்தல்........................................ 5
5. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுடன் நெருக்கமான உறவு 6
6. பொறுமையின் முன்மாதிரி............................................................ 9
7. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மேல் கொண்டிருந்த நேசம்.............................. 11
8. அநாதைகளை அரவணைத்தல்...................................................... 11
9. சிறப்பு மிக்க உறுதிமொழி............................................................ 13
10. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் மிகவும் அதிசயிக்கத்தக்க ஓர் அடையாளம்.............................................. 13
11. விருந்துபசரிப்பு............................................................................ 15
12. ஜிஹாதில் பங்கேற்பு.................................................................. 16
13. உயர்ந்த அந்தஸ்தும் சுவர்க்கத்தைப் பற்றிய நற்செய்தியும்.... 17

بسم الله الرّحمٰن الرّحيم

# ஹஸ்ரத் உம்மே சுலைம்ரலி

அன்பார்ந்த குழந்தைகளே!

இப்போது ஹஸ்ரத் தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்த ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் தாயாரைப்பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

அன்னார் இறையச்சமிக்க பெண்மணியாவார்கள். அவர்களின் நல்லொழுக்க இயல்பினை அன்னாரின் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். அவர்களின் இயற்பெயர் கமீஸா ஆகும். எனினும் "உம்மே சுலைம்" என்று அழைக்கப்பட்டார்கள். அன்னாரின் தகப்பனார் "மல்ஹான் பின் காலித்; தாயார் முலைகாஹ்."

## இஸ்லாத்தை தழுவுதலும் திருமணமும்

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நிகழ்வும் அன்னாரது திருமணமும் நமது ஆவலைத் தூண்டும் வண்ணம் உள்ளன. இஸ்லாத்தை ஏற்கும் முன்பு அன்னார் 'மாலிக் பின் நஸர்' என்பவரைத் திருமணம் புரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் பிறந்தவுடன் மதீனாவில், இஸ்லாத்தில் இணைந்த ஆரம்பகால முஸ்லிம்களில் ஒருவராக அன்னார் ஆகிவிட்டார்கள். எனினும் அவரது கணவர் பழைய மத நம்பிக்கையில் பிடிவாதமாக இருந்தார். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் தருணம் கிடைக்கும் போதெல்லாம் இஸ்லாத்தின் போதனைகளை தம் கணவர் மாலிக்கிற்கு எடுத்துக்கூறிய போதிலும், அவர் இஸ்லாத்தின் கொள்கைகளை ஏற்க மறுத்து சிரியா சென்று, மரணிக்கும் வரை அங்கேயே இருந்து விட்டார்.

மாலிக் மரணித்த பின் மதீனாவிலுள்ள அன்னாரின் கோத்திரத்தைச் சார்ந்தவரும் செல்வந்தருமான அபூ தல்ஹா அன்சாரி (ரலி) அவர்களிடமிருந்து திருமண பந்தத்திற்கான அழைப்பினைப் பெற்றார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் இந்த திருமண அழைப்பை ஏற்க மறுத்தார்கள். ஏனெனில் அபூதல்ஹா (ரலி) அவர்கள் அப்போது இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் மகிமைக்கு கண்ணியம் அளித்தவாறு, சிலைவணக்கம் செய்பவரைத் தன்னால் ஒரு போதும் மணமுடிக்க முடியாது எனக்கூறினார்கள்.

மிகவும் சாதுர்யமான முறையில் இஸ்லாத்தின் அழகிய தூதுச் செய்தியை ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அபூதல்ஹாவின் சிந்தனைக்காக எடுத்து வைத்தார்கள். அவர் மரங்களை வணங்கும் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ‘‘நீங்கள் வணங்கும் கடவுள் பூமியில்தான் வளர்கிறது என்று உங்களுக்குத் தெரியாதா?’’ என்று கேட்டார்கள். அவர், ஆம் உண்மைதான் என்று பதிலுரைத்தார். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள், ‘ஒரு மரத்தை வணங்குகிறோமே என்பது உங்களுக்கு மனச்சங்கடத்தைத் தரவில்லையா?’ எனக்கேட்டார்கள்.

அவரைப்போல் ஒரு பெரும் மதிப்பிற்குரியவரிடமிருந்து வந்துள்ள திருமணத்திற்கான அழைப்பினை தாம் நிராகரிக்கும் வாய்ப்பு இல்லாத நிலையிலும் ஒரு முஸ்லிமிற்கும், ஒரு இணைவைப்பவருக்கும் இடையில் நடக்கும் திருமணம், சட்டத்திற்கு புறம்பானதாகும் என விளக்கினார்கள். மேலும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் தான் அவரிடமிருந்து எவ்வித மஹர் தொகையையும் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்றும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதே தனக்குக்

கிடைக்கும் மஹர் ஆகும் என்றும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அவருக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். சிறிது காலத்திற்குப்பின் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப அபூதல்ஹா (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். தம் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் தமது மகன் ஹஸ்ரத் அனஸ் (ரலி) பொறுப்பாளராக இருக்கின்ற நிலையில் திருமணம் செய்தார்கள்.

## குழந்தைகள்

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுடனான திருமணத்திற்கு பின் அன்னாருக்கு அப்துல்லாஹ், அபூ உமைர் என்னும் இரு ஆண் மக்கள் கிடைத்தனர். இவர் நுகைர் என்னும் வளர்ப்புப் பறவையைப் பராமரித்த அதே அபூ உமைர் தான். ஒருமுறை அப்பறவை திடீரெனக் காணாமல் போனதோ அல்லது இறந்து போனதோ என்று தெரியவில்லை, ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அச்சிறுவனை நோக்கி நகைச்சுவையாக “அபூ உமைரே! நுகைர் உனக்கு என்ன செய்து விட்டது எனப்பார்த்தாயா?” எனக்கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ உமைர் (ரலி) இளம் வயதில் மரணித்த பின் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களுக்கு இன்னொரு மகன் பிறக்க துஆ செய்தார்கள். அதன் விளைவாக அப்துல்லாஹ் பிறந்தார். இவ்வாறு ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) – ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) இவர்களின் வம்சம் தொடர்ந்தது. அப்துல்லாஹ் பிறந்ததும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி), அந்த பாலகனை அதன் மூத்த சகோதரரான அனஸ் (ரலி) அவர்களிடம் கொடுத்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் துஆவும் அருளுக்குரிய வாழ்த்தும் கிடைப்பதற்காக கொடுத்தனுப்பினார்கள். அனஸ் (ரலி) அவர்களின் கைகளில் குழந்தை அப்துல்லாஹ் இருப்பதைக்

கண்ட ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் “உம்மே சுலைமிற்கு ஒரு குழந்தை பிறந்திருப்பதாகத் தெரிகிறது” என்று கூறினார்கள். எந்த குழந்தைக்காக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்களோ, அதுவே அக்குழந்தையாகும். மிக்க பாசத்துடன் தம் கரங்களில் அக்குழந்தையை ஏந்திய ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள், மதீனாவில் பிரசித்தி பெற்ற அஜ்வஹ் என்னும் பேரீச்சம்பழத்தைக் கொண்டு வரச்செய்தார்கள். அதனை தம் அருளுக்குரிய வாயில் இட்டு மென்று மிருதுவாக்கி அப்துல்லாஹ்வுக்கு புகட்டியதும் அக்குழந்தை அதனை நன்கு ருசித்து உண்ணத் தொடங்கியது. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அப்போது, அன்சார்கள் தம் பேரீச்சம்பழங்களை எவ்வாறு ருசிக்கிறார்கள் எனப் பாருங்களேன். மேலும் சிறு குழந்தையும் கூட அதன் ருசியை முழுமையாக அனுபவிக்கிறது எனக்கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அக்குழந்தைக்கு ‘அப்துல்லாஹ்’ எனப்பெயரிட்டு அதற்கு இறை அருட்கள் கிடைப்பதற்காக துஆ செய்தார்கள். பிற்காலத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களுக்கு ஒன்பது ஆண் மக்கள் இருந்தனர் என்றும் அவர்கள் அனைவரும் திருக்குர்ஆனை முழுவதுமாக மனனம் செய்திருந்தனர் என்றும் சில அறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

## ஹஸ்ரத் தூய நபி ஸல் அவர்களது துஆக்களின் மீது கொண்ட நம்பிக்கை

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களின் சிறப்பான குணங்களில் ஒன்று அன்னார் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் துஆக்களின் மீது கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையாகும். அதன் காரணமாகவே தம் பச்சிளம் குழந்தையை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் துஆக்களிலிருந்து நன்மைகள் கிடைக்கும் பொருட்டு அதிக சிரத்தையுடன் கொடுத்தனுப்பினார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம்

(ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களது துஆக்களின் மீது உன்னதமான நம்பிக்கை இருந்தது. ஒருமுறை அன்னார் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் தமது பிரார்த்தனையில் ஓதுவதற்கான அதிகப்படியான சில துஆக்களைக் கேட்டார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூய்மையானவன்), அல்ஹம்து லில்லாஹ் (அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்), அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப்பெரியவன்) என்று பத்து, பத்து முறை கூறி அதன் பின் அல்லாஹ்விடம் உமக்கு தேவையானதை வேண்டுவீராக! என்று பதிலுரைத்தார்கள்.

## அனஸ்[ரலி] அவர்களை அர்ப்பணித்தல்

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு பணிவிடை செய்வதற்காக பத்து வயதான தம் மகன் அனஸை அர்பணித்தார்கள். அப்போது அன்னார் ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னைத்தவிர அன்ஸார்களில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்களுக்கு ஒரு பரிசினை வழங்குகின்றனர். தங்களிடம் அளிப்பதற்கு எனக்கு இந்த பாலகன் மட்டுமே உள்ளான். இவரைத் தாங்கள் ஏற்றுக்கொண்டால் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன்'' எனக்கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மிகுந்த பாசத்துடன் அச்சிறுவனை ஏற்றுக்கொண்டார்கள். அவருக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்த பத்தாண்டு காலம் பணிவிடை செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது.

ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களோடு இருக்கும் போது, ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தமக்கு வழங்கிய அறிவுரைகளை அனஸ் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

**1.** எனதருமை மகனே! எனது நம்பிக்கைக்குரியவனாக இருப்பீராக! அப்போது நீர் உண்மையான நம்பிக்கையாளராக ஆகி விடுவீர்.

2. முடிந்தவரை எப்போதும் உளூவுடன் இருப்பீராக. உயிரைக்கவரும் வானவர் உளூவுடன் இருக்கின்ற நிலையில் ஓர் ஆன்மாவைக் கைப்பற்றும் போது அவர் அந்த ஆன்மாவிற்கு ஆதரவாக சாட்சி கூறுவார்.

3. மகனே! எப்பொழுதும் முடிந்தவரை துஆ செய்துகொண்டே இருப்பீராக. நீர் அவ்வாறு இருக்கின்ற நிலையில் மலக்குகளும் உமக்காக துஆ செய்வார்கள்.

4. வீட்டிலிருந்து எப்போது நீர் வெளியில் சென்றாலும் ஸலாம் சொல்வதற்காக அல்லாமல், மக்களை (காரணமின்றி) கூர்ந்து பார்க்க வேண்டாம். இந்நிலையில் நீர் வீடு திருப்புகின்றபோது உம் நல்லொழுக்கம் அதிகமாகும்; அத்துடன் உம் குடும்பத்தாருக்கும் இன்னும் அதிக நல்லருட்களைப் பெற்றுத்தரும்.

5. நீர் எனக்கு முழுவதுமாக கட்டுப்பட்டு நடந்தால் மரணத்தைத்தவிர உமக்கு வேறு எதுவும் அதிக விருப்பத்திற்குரியதாக இருக்காது.

## ஹஸ்ரத் தூய நபி[ஸல்] அவர்களுடன் நெருக்கமான உறவு

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் தாய் வழி உறவினராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்களும் உண்மையான சஹாபாவாக இருந்தார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் சிறிதும் தயக்கமின்றி அவர்களது வீட்டிற்குச் செல்வார்கள்; எப்போதாவது ஓய்வெடுத்துக்கொள்வார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்தால் அதனை ஏற்றுக்கொள்வார்கள். அதே போல அன்னார் மார்க்கம் சம்பந்தப்பட்ட கேள்விகளைக்கேட்டால் மனமுவந்து பதில் உரைப்பார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள்

இல்லாத பொழுது ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அன்னாரது இல்லத்திற்கு வருகை புரிந்தார்கள், அங்கே சிறிது ஓய்வெடுப்பதற்காக படுத்திருந்தார்கள். யாரோ ஒருவர் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அன்னாரது வீட்டில் ஓய்வெடுப்பதாகக் கூறினார். வீட்டிற்கு விரைந்த ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள், அதிகமான வியர்வையில் நனைந்திருப்பதைக் கண்டார்கள். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அன்னாரின் வியர்வையைத் துடைத்தெடுத்து ஒரு குப்பியில் சேகரித்தார்கள். திடுக்கிட்டு விழித்துக்கொண்ட ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் "தாங்கள் என்ன செய்கிறீர்கள்" எனக்கேட்டார்கள். இதற்கு பதில் அளித்த ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் "இதனை எனது வாசனை தரும் திரவ குப்பியில் ஊற்றி வைத்துக்கொள்வேன். ஏனெனில் தங்களது வியர்வையின் மணம் எல்லா செண்ட் வாசனை திரவங்களை விடவும் மிகச்சிறந்ததாகும். இதை நான் இவ்வாறு ஏன் செய்கிறேன் என்றால் என் குழந்தைகள் இதன் அருளிலிருந்து பயன் பெறுவார்கள்" என்று கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் "அவ்வாறென்றால் சரி" என பதில் கூறினார்கள்.

அதே போல இன்னொரு முறை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் வீட்டிற்கு வருகை தந்த போது சிறிது பேரீச்சம்பழங்களையும், வெண்ணெயையும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் வழங்கினார்கள். தான் நோன்பு நோற்றிருப்பதாகவும் அதனை அப்படியே அந்த பாத்திரத்தில் வைக்குமாறும் தூய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் வீட்டில், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், ஓர்

ஓரத்தில் சென்று நஃபில் தொழுகையை நிறைவேற்றினார்கள். மேலும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களுக்காகவும், அவர்களின் குடும்பத்தினருக்காகவும் துஆ செய்தார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் தமக்கு ஓர் ஆசை இருப்பதாகக் கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அதனை விசாரித்த போது, ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களிடம் பணிசெய்யும் அன்னாரது மகன் அனஸுக்காக துஆ செய்யும்படி வேண்டினார்கள்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். "அல்லாஹ்வே! அனஸுக்கு பொருட்செல்வத்தையும், மக்கட் செல்வத்தையும் வழங்குவாயாக." எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் துஆவை ஆச்சரியமூட்டும் விதத்தில் நிறைவேற்றினான். இதன்படி ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் சந்ததிகள் அன்னாரின் வாழ்நாளிலேயே நூற்றுக்கதிகமாகப் பெருகி விட்டனர். அன்னாரின் தோட்டங்களில் வருடத்திற்கு இரு பருவங்களில் பழங்கள் கிடைத்தன. மேலும் அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்தார்கள்.

ஒரு முறை ஒருவர் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம், தாங்கள் உம்மஹாத்துல் முஃமினீன் (நம்பிக்கையாளர்களின் தாய்மார்கள்) வீட்டிற்கு செல்வதைத்தவிர தாங்கள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களின் வீட்டிற்கும் செல்வதற்கான காரணமென்ன எனக்கேட்டார். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'எனக்கு அவர் தாய்வழி பந்தம் ஆவார். எனவே அதற்குரிய கடமையைச் செய்கிறேன். மேலும் இரண்டாவதாக ஒரு போரில் அன்னாரின் தகப்பனாரும், சகோதரரும் ஷஹீதாகிவிட்டார்கள். அதற்குரிய மரியாதையையும் நான் செய்கிறேன், என்று பதில் கூறினார்கள்

# பொறுமையின் முன்மாதிரி

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களும், அவர்களின் கணவர் அபூ தல்ஹா (ரலி) அவர்களும் தங்கள் மகன் ஹஸ்ரத் அபூ உமைர் (ரலி) மரணமுற்ற வேளையில் பொறுமையுடன் நடந்து கொண்ட விதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களின் அன்பிற்குரிய மகன் அபூ உமைர் (ரலி) அவர்களின் உடல் நிலை திடீரென மோசமடைந்தது. அவரது தந்தையார் அபூதல்ஹா (ரலி) அவர்கள் அப்போது பயணத்தில் இருந்தார்கள். நோயின் காரணமாக அபூ உமைர் (ரலி) திடீரென மரணமடைந்தார். தான் மிகவும் நேசித்த அக்குழந்தை மரணமுற்ற போது ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் மிகவும் பொறுமை செய்தார்கள். தம் கணவர் வீடு திரும்பியதும் தமது துக்கத்தை சிறிதும் வெளிக்காட்டாமல், அவருக்கு எவ்வித துன்பமும் கொடுக்காமல், அபூ உமைர் (ரலி) தனக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அமானிதம் என்று மிகவும் பொறுமையுடன் இருந்தார்கள். அபூதல்ஹாவிடம் இது பற்றி எதுவும் சொல்லிவிட வேண்டாம் என வீட்டிலிருந்தவர்களுக்கு அறிவுரை கூறியிருந்தார்கள். அபூ தல்ஹா (ரலி) அவர்கள் வீட்டிற்கு திரும்பியதும் சுகவீனமாய் இருந்த தம் மகனைப்பற்றி விசாரித்தார்கள். அதற்கு ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் மிகுந்த ஞானத்துடன், அவர் அமைதியாக இருப்பதாகக் கூறினார்கள். இதன் பொருளாக ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அறிந்து கொண்டது அபூ உமைர் (ரலி) அவர்கள் வேதனையிலிருந்தும் விடுபட்டு தம் படைத்தவனிடம் சென்றுவிட்டார் என்பதாகும். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தம்மகன் மீண்டும் நலத்துடன் இருப்பதாக எண்ணிக்கொண்டார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் தம் கணவருக்கு இரவு உணவை வழங்கிய

பின் இருவரும் உறங்கச்சென்று விட்டனர்.

காலையில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தொழுகைக்காக நபவி பள்ளிவாசலுக்குச் செல்லும் தருணத்தில் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அன்னாரை தடுத்து நிறுத்தி இவ்வாறாகக் கேட்டார்கள். "அபூ தல்ஹா, ஒருவர் நம்மிடம் ஒப்படைத்ததை மீண்டும் கேட்டால் நாம் அதை திரும்ப கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? 'அபூ தல்ஹா, ஆம், திரும்ப கொடுக்க வேண்டும்' எனக்கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் "பொறுமை காட்டுங்கள், உங்கள் மகன் மரணித்து விட்டார், ஏனெனில் அவர் அல்லாஹ் நம்மிடம் ஒப்படைத்திருந்த ஓர் அமானிதமாவார்; அதனை நாம் பெற்றுக்கொண்டோம், அல்லாஹ் நம்மிடமிருந்து அந்த அமானிதத்தை மீண்டும் வாங்கிக்கொண்டான்" என்று கூறினார்கள். அபூ தல்ஹா அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் நடந்த அத்தனை விஷயங்களையும் கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் "எல்லாம் வல்ல இறைவன் அந்த இரவை உமக்கு ஓர் அருளுக்குரிய இரவாக ஆக்குவானாக! மேலும் தங்களுக்கு அதற்குப்பகரமாக அதிக அருட்களை வழங்குவானாக" என்று துஆ கேட்டார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களது இந்த துஆ ஒப்புக்கொள்ளப்பட்டு வல்லமைமிக்க இறைவன் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களுக்கு எவ்வாறு அருள் செய்தான் என்றால் அன்னாருக்கு பத்து ஆண் சந்ததிகளை வழங்கினான். அவர்கள் அனைவரும் திருக்குர்ஆனை மனனம் செய்து திருக்குர்ஆன் ஹாஃபிஸ் ஆக இருந்தனர்.

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மீது அதிக நேசம் கொண்டிருந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அன்னாரின் வீட்டிற்கு சென்றார்கள். தாகத்துடன் இருந்ததால்,

தாமே எழுந்து சென்று ஒரு சிறிய குப்பியிலிருந்து நீர் அருந்தினார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அந்த சிறிய குப்பியின் வாய் பகுதியை வெட்டி எடுத்து அதனை தனக்கென்று அருளுக்குரிய ஞாபகப் பொருளாக வைத்துக்கொண்டார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் கத்தரித்த முடியையும் ஒரு பாட்டிலில் சேகரித்தார்கள். அதே போல் வியர்வைத்துளிகளையும் வாசனைத்திரவியமாக அடைத்து வைத்தார்கள். எனினும் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் இவ்வனைத்துப் பொருட்களும் தம் மரணத்திற்குப்பின் தம்முடன் புதைக்கப்பட வேண்டும் என்று தம் மரணத்திற்கு முன் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

## ஹஸ்ரத் தூய நபி^ஸல்^ அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மேல் கொண்டிருந்த நேசம்

ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் திருமணம் ஹிஜ்ரி 5 ஆம் வருடம் நடந்த போது ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ஒரு பாத்திரம் நிறைய தாம் சுவையாக சமைத்த மாமிச உணவை தம் எளிய பரிசாக அன்றைய தினம் அனுப்பி வைத்தார்கள். கைபர் போருக்குப்பின் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மணந்த போது அவர்களை மணப்பெண்ணாக அலங்கரித்தார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் எப்போதும் போர்க்களத்திற்குச் செல்வார்கள், மேலும் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களது குடும்பத்தைச்சார்ந்த பெண்களுடன் பயணம் மேற்கொள்வார்கள்.

## அநாதைகளை அரவணைத்தல்

இன்னுமொரு சுவாரசியமான சம்பவம் என்னவென்றால்

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களிடம் வளர்ந்து வந்த ஒரு சிறுமியைப்பார்த்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'நீ எவ்வளவு பெரியவளாக வளர்ந்து விட்டாய்' எனக் கூறினார்கள், பின் நகைச்சுவையாக 'இதற்கு மேல் வளர வேண்டாம்' என்றார்கள். இதைக்கேட்ட அந்த சிறுமி அழுது கொண்டு ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களிடம் சென்றாள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) "அருமை மகளே! ஏன் அழுகிறாய்" எனக்கேட்க அதற்கு அச்சிறுமி ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'நான் இதற்கு மேல் வளர வேண்டாம் எனக்கூறினார்கள். அதனால் நான் இனி வளரவே மாட்டேன்' எனக் கூறினாள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் உடனே எழுந்து மேலாடையை எடுத்துப் போர்த்திக்கொண்டு நேராக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அன்னாரிடம் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'என்ன நடந்தது' எனக்கேட்டார்கள். அதற்கு, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எனது அனாதை சிறுமியை சபித்து விட்டீர்களா?" எனக்கேட்டார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் "அவ்வாறு கூறக்காரணம் என்ன?" எனக்கேட்டார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அப்போது விவரித்தார்கள். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் அவளை இனி வளர வேண்டாம் எனக்கூறியதை அவள், தாங்கள் அவளை சபித்து விட்டதாகக் கருதி அழுகிறாள்." ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். பின், 'உம்மே சுலைமே! அல்லாஹ்விடம் நான் செய்துள்ள ஓர் உடன்படிக்கை பற்றி உமக்குத்தெரியாதா? நானும் மனிதன் தான். சாதாரண மனிதர்களைப்போல் நானும் மகிழ்ச்சி அடைகிறேன், கோபப்படவும் செய்கின்றேன். ஆனால் நான் எனது உம்மத்தைச்சார்ந்த மக்களுள் சிலருக்கு, சிலவற்றை அவர் அதற்கு தகுதியற்றவராக இருக்கின்ற நிலையில்,

சொல்லியிருந்தேன் என்றால், நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் நாளில், இறைவா! நீ அதனை அம்மனிதனுக்கு தூய்மைக்கான வழியாகவும் இறைநெருக்கத்தை பெறத்தக்கதாகவும் ஆக்குவாயாக என்று அல்லாஹ்விடம் கூறியுள்ளேனே'' என பதில் கூறினார்கள்.

இச்சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் தம் வீட்டிலிருந்த அனாதைகளை நன்கு பராமரித்த விதம் நமக்குக் காணக்கிடைக்கின்றது. அவர்களின் நுட்பமான உணர்வுகளுக்கும், அப்பாவித்தனமான துன்பங்களுக்கும் மதிப்பளித்து அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக கடினமாகத் தொண்டாற்றினார்கள்.

## சிறப்பு மிக்க உறுதிமொழி

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் அதிகமாக கட்டுப்பட்டு நடக்கக்கூடிய சஹாபியாவாகத் திகழ்ந்தார்கள். அன்னாரின் எல்லா கட்டளைகளையும் சிறந்த முறையில் பின்பற்றி வந்தார்கள். ஒரு பெண்மணி கூறுவதாவது: ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் பெண்களிடம், 'உறவினர் யாரும் மரணித்துவிட்டால் அதற்காக நாங்கள் ஒப்பாரி வைக்க மாட்டோம்' என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் பைஅத் வாங்கினார்கள். இந்த உறுதிமொழியின் படி நடந்த ஐந்து பெண்களுள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

## ஹஸ்ரத் தூய நபி[ஸல்] அவர்களின் மிகவும் அதிசயிக்கத்தக்க ஓர் அடையாளம்

மதீனாவில் ஆரம்ப நாட்களில், ஒரு நாள், ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களிடம் வந்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின்

பேச்சில் ஒரு தளர்வு தெரிவதாகக் கூறினார்கள். அன்னார் சில நாட்களாக சாப்பிடாமல் இருந்ததால் அந்த தளர்வு ஏற்பட்டிருக்கலாம் என்று அவர்களுக்குத் தோன்றியது. அன்னார் வீட்டில் சாப்பிட ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் 'ஆமாம்' என்று கூறி உடனை சில ரொட்டிகளை துணியில் வைத்துக் கட்டி தமது மகன் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்குக் கொடுத்தனுப்பினார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் நேராக நபியின் பள்ளிவாசலுக்கு சென்றதை விவரிக்கின்றார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் தம் சஹாபாக்களுடன் அமர்ந்திருந்த போது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் தூய நபி (ஸல்) முன்பாக நின்றார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள். "அபூ தல்ஹா உம்மிடம் ஏதாவது உணவு கொடுத்தனுப்பியுள்ளாரா?" என்று வினவினார்கள் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் 'ஆம், அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே!' என்று மறுமொழி பகன்றார்கள். அங்கு அமர்ந்திருந்த அனைவரையும் அவர்களோடு இணைந்து ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) வீட்டிற்குச் செல்வதற்காக அழைத்தார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் தம் சஹாபாக்களுடன் அங்கு வர திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுடன் எல்லோரும் வர இருப்பதை தெரிவித்ததும் அனைவருக்கும் போதுமான அளவு உணவு இல்லையே! எனக்கூறினார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் உறுதியான நம்பிக்கை வைத்தவாறு 'அல்லாஹ்வும் அவனது தூதரும் இதனை நன்கறிவார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள், மேலும் ஈமானில் உறுதி பெற்றவர்களாக வெளியில் சென்று ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களை வரவேற்க தயாரானார்கள்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் உங்களிடம் என்ன இருக்கிறதோ அதனைக் கொண்டுவாருங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அந்த ரொட்டிகளைக் கொண்டு வந்து சிறிய துண்டுகளாக்கினார்கள். பின் அதன் மேல் சிறிது எண்ணெய்யைத் தடவினார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் துஆ செய்த பின் ஒரு முறைக்கு 10 சஹாபாக்கள் வீதம் உள்ளே வந்து உணவருந்தும்படிக் கூறினார்கள். அங்கு வந்திருந்த அனைவருக்கும் அதாவது சுமார் 70 முதல் 80 பேருக்கும் இதிலிருந்து உணவு உண்ண கிடைத்தது.

## விருந்துபசரிப்பு

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் அதிகமாக விருந்துபசரிப்பு செய்யக்கூடிய பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். அன்னாரின் தியாகம் மற்றும் அர்ப்பணிப்பு பற்றிய ஒரு சுவையான சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

ஒரு முறை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களைக்காண ஒரு விருந்தினர் வந்த போது இறையச்சம் கொண்ட தம் மனைவியரிடம் உணவிற்கான ஏற்பாட்டை செய்யும் படிக்கூறினார்கள். அந்நேரத்தில் அவர்கள் ஒருவரிடமும் வழங்குவதற்கு எதுவும் இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் தம் சஹாபாக்களிடம் இது பற்றி கூறியதும், ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் மகிழ்ச்சியுடன் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். வீட்டிற்கு சென்றதும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் அந்த விருந்தினருக்காக உணவு ஏற்பாடு

செய்யும்படி கூறினார்கள். அன்னாரிடம் தம் குழந்தைகளுக்கு மட்டுமே சிறிது உணவு இருப்பதாக ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் கூறினார்கள். இப்படிபட்ட சூழ்நிலையில் தம் குழந்தைகளை எப்படியாவது உறங்க அனுப்பி விட்டு இருக்கின்ற உணவை அவ்விருந்தினருக்கு கொடுக்கலாம் எனத் தீர்மானித்தனர். இத்திட்டத்தை அவர்கள் இருவரும் மிகச்செம்மையாக செயல்படுத்தினர். உணவிற்கான நேரம் வந்ததும் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் எழுந்து விருந்தினர் திருப்தியுடன் உண்ணவேண்டும் என்பதற்காக விளக்கை சரி செய்வது போல் அதனை அணைத்துவிட்டார்கள். அவ்விருந்தினர் உணவை உண்ணத்தொடங்கும் போது அவ்விருவரும் மென்று சாப்பிடுவது போல் சப்தம் செய்தனர், இரவு பொழுதைப் பட்டினியில் கழித்தனர். காலையில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களைக் காணச்சென்றார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், “நேற்றிரவு என்னுடைய விருந்தினரை நல்ல முறையில் உபசரித்ததன் காரணமாக அல்லாஹ்வும் சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டிருந்தான்” என்று கூறினார்கள்.

## ஜிஹாதில் பங்கேற்பு

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் போர்க்களத்திற்குச் செல்லும் போது ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களையும் மற்றும் சில அன்ஸார் பெண்களையும் அழைத்துச் செல்வார்கள். இப்பெண்கள் தாகத்துடன் இருப்போருக்கு குடிநீர் கொடுப்பார்கள்; காயமுற்றோருக்கு மருந்திடுவார்கள். ஹுனைன் போரில் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களின் வீரத்திற்குரிய நிகழ்வு நடந்தேரியது. அன்னார் ஒரு சிறிய குத்து வாளை தம் இடுப்புக்கச்சையில் மறைத்து வைத்திருப்பதாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் அவரது கணவர்

கூறினார். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இது பற்றி கேட்ட போது, ‘‘இணைவைப்பவர்கள் எவரையும் கண்டால் அவர்களின் குடலைக்கிழிக்க உத்தேசித்துள்ளேன்’’ என்று பதிலளித்தார்கள். அந்த உணர்ச்சி மிக்க பேச்சினைக்கேட்டு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் புன்னகை செய்தார்கள். மேலும் அன்னார் ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தப்பி ஓடுபவர்களுக்கு தாங்கள் என்ன கட்டளையிடுகின்றீர்கள்’’ எனக்கேட்டார்கள்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம், அதனை அல்லாஹ் அவனது பொறுப்பில் எடுத்துக்கொள்வான்.

## உயர்ந்த அந்தஸ்தும் சுவர்க்கத்தைப்பற்றிய நற்செய்தியும்

ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்களுக்கு கிடைக்கவிருக்கும் சுவனத்தின் அந்தஸ்து பற்றிய முன்னறிவிப்பை அன்னாரின் வாழ்நாளிலேயே தெரிவித்திருந்தார்கள்.

சுவர்க்கத்தில் ஒருவருடைய காலடி ஓசையைக் கேட்டதாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஒரு கனவில் கண்டார்கள். அப்போது அவர்களுக்கு அது ‘கமீஸா பின்த் மல்ஹான் உம்மே சுலைம் (ரலி)’ அவர்களுடையது எனக் கனவில் கூறப்பட்டது. ஹஸ்ரத் அபூ பக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் காலத்தில் ஹஸ்ரத் உம்மே சுலைம் (ரலி) அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.